

புதுக்கோட்டை இராணியார் அரசினர் மகளிர் உயர்நிலைப் பள்ளியில் திருமயம் சட்டமன்றத் தொகுதி தி.மு.க. வேட்பாளரும், அமைச்சருமான எஸ்.ரகுபதி தனது வாக்கினை பதிவு செய்தார்.



காங்கேயம் சட்டமன்ற தொகுதி கழக வேட்பாளர், கழக துணை பொதுச் செயலாளர், அமைச்சர் மு.பெ.சாமிநாதன் முத்தூர் நடுநிலைப்பள்ளியில் தனது ஜனநாயகக் கடமையை நிறைவேற்றினார்.



தமிழக சட்டமன்ற திருவெறும்பூர் தொகுதியில் மூன்றாவது முறையாக போட்டியிடும் பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி, தனது வாக்கைச் செலுத்துவதற்காக, திருச்சி வரகனேரியில் உள்ள டி.எஸ்.எம். (TSM) மேல்நிலைப்பள்ளியில் அமைந்துள்ள வாக்குச்சாவடியில், தனது மனைவி ஜனனியுடன் நீண்ட வரிசையில் காத்திருந்து தங்களது ஜனநாயகக் கடமையை ஆற்றினார்.



இராணிப்பேட்டை சட்டமன்ற தொகுதியில் மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி சார்பில் போட்டியிடும் தி.மு.க. வேட்பாளர் அமைச்சர் ஆர்.காந்தி தனது வாக்கை நவல்பூரில் உள்ள பள்ளியில் பதிவு செய்தார்.



வேலூர் மாவட்டம் அணைக்கட்டு சட்டமன்ற தொகுதி மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி சார்பில் போட்டியிடும் தி.மு.க. வேட்பாளர் ஏ.பி.நந்தகுமார் தனது ஊரான லத்தேரியில் வாக்கு பதிவு செய்தார்.



விழுப்புரம் மாவட்டம் செஞ்சி சட்டமன்ற தொகுதியில் நடைபெற்ற வாக்குப்பதிவில் செஞ்சி ஒன்றியம் அங்கராயநல்லூர் அரசு தொடக்கப்பள்ளியில் செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. வாக்கினை பதிவு செய்தார்.



தென்காசி மாவட்டம் சங்கரன்கோவில் சட்டமன்றத் தொகுதி கலிங்கப்பட்டி அரசு மேல்நிலைப் பள்ளியில் ம.தி.மு.க முதன்மை செயலாளர் துரை வைகோ எம்.பி தனது வாக்கினை பதிவு செய்தார்.



மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணியின் இராமநாதபுரம் சட்டமன்ற தொகுதி வேட்பாளர் மாவட்ட கழக செயலாளர் காதர் பாட்ஷா முத்துராமலிங்கம் தனது சொந்த ஊரில் தன் வாக்கினை செலுத்தினார்.



நெல்லை மாவட்டம் பாளையங்கோட்டை சட்டமன்றத் தொகுதி கழக வெற்றி வேட்பாளர் மு.அப்துல் வஹாப் பேட்டை புனித அந்தோணியார் பள்ளியில் தனது வாக்கினை பதிவு செய்தார்



தென்காசி மாவட்டம் வாசுதேவநல்லூர் சட்டமன்றத் தொகுதி கழக வெற்றி வேட்பாளர் ஈ.ராஜா சங்கரன்கோவில் அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளியில் முதல் வாக்காக தன்னுடைய வாக்கினை பதிவு செய்தார்.



தென்காசி மாவட்டம் சங்கரன்கோவில் சட்டமன்றத் தொகுதி சங்கரன்கோவில் அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளியில் தென்காசி நாடாளுமன்ற உறுப்பினர் மரு. ராணிஸ்ரீ குமார் தனது வாக்கினை பதிவு செய்தார்.



நெல்லை மாவட்டம் திருநெல்வேலி சட்டமன்றத் தொகுதி கழக வெற்றி வேட்பாளர் சு.சுப்பிரமணியன் பாளை ராம்நகர் ரோஸ்மேரி பள்ளியில் தன்னுடைய வாக்கினை பதிவு செய்தார்.



சிவகங்கை மாவட்டம் மானாமதுரை சட்டமன்றத் தொகுதி வேட்பாளர் திருமதி தமிழரசி ரவிக்குமார் எம். எல்.ஏ. தனது வாக்கினை சங்கமங்கலம் அரசு தொடக்கப் பள்ளியில் பதிவு செய்தார்.



தென்காசி மாவட்டம் ஆலங்குளம் சட்டமன்றத் தொகுதி கழக வெற்றி வேட்பாளர் பி.ஹெச்.பி. மனோஜ் பாண்டியன் சேரன்மகாதேவி அடுத்த கரிசல்பட்டி சி.எம்.எஸ்.டேவிட் மெமோரியல் மேல்நிலைப் பள்ளியில் தனது வாக்கினை பதிவு செய்தார்.



மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணியின் பரமக்குடி சட்டமன்ற தொகுதி கழக வேட்பாளர் வழக்கறிஞர் கே. கதிரவன் தனது சொந்த ஊரில் வாக்கினை செலுத்தினார்.



திராவிட முன்னேற்றக் கழக தலைமையிலான மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி சார்பில், சங்கராபுரம் சட்டமன்ற தொகுதியில் போட்டியிடும் கழக வெற்றி வேட்பாளரும், கள்ளக்குறிச்சி வடக்கு மாவட்ட கழக செயலாளருமான தா.உதயசூரியன் தனது சொந்த ஊரான வடக்கனந்தல் டேனிஷ் மிஷன் தொடக்கப்பள்ளியில் அமைந்துள்ள வாக்குச்சாவடி மையத்தில் வாக்களித்து தனது ஜனநாயக கடமையை நிறைவேற்றினார்.



திராவிட முன்னேற்றக் கழக தலைமையிலான மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி சார்பில், உளுந்தூர்பேட்டை சட்டமன்ற தொகுதியில் போட்டியிடும் கழகத்தின் வெற்றி வேட்பாளர் ஜி.ஆர். வசந்தவேல் தனது சொந்த ஊரான திருநாவலூர் ஒன்றியம், எலத்தவாடி கிராமம் அரசு நடுநிலைப் பள்ளியில் அமைந்துள்ள வாக்குச்சாவடி மையத்தில் வாக்களித்து தனது ஜனநாயக கடமையை நிறைவேற்றினார்.




தேனி மாவட்டம் கம்பம் தொகுதி உழவர் சந்தை அருகில் உள்ள அரசு கள்ளர் ஆரம்பப் பள்ளியில் தெற்கு மாவட்ட செயலாளர் கம்பம் தொகுதி கழக வேட்பாளர் கம்பம் ராமகிருஷ்ணன் தனது வாக்கை செலுத்தினார்.



தேனி மாவட்டம் ஆண்டிபட்டி தொகுதி நாராயண தேவன் பட்டி அரசு கள்ளர் உயர்நிலைப் பள்ளியில் வடக்கு மாவட்ட செயலாளர் தங்க தமிழ்ச்செல்வன் எம்.பி. தனது வாக்கை செலுத்தினார்.




தேனி மாவட்டம் ஆண்டிபட்டி தொகுதி கடை வீதியில் உள்ள ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளியில் ஆண்டிபட்டி தொகுதி கழக வேட்பாளர் மகாராஜன் தனது வாக்கினை பதிவு செய்தார்.



மதுரை மாவட்டம் சோழவந்தான் சட்டமன்ற தொகுதி கழக வேட்பாளர், மாவட்ட துணைச் செயலாளர் ஆ.வெங்கடேசன் எம் எல் ஏ கிழக்கு தொகுதிக்குட்பட்ட காதக்கிணறு அங்கன்வாடி மையத்தில் அமைந்துள்ள வாக்குச்சாவடியில் தனது வாக்கினை பதிவு செய்தார்.



கழக மகளிர் அணி துணை செயலாளர், அமைச்சர் என்.கயல்விழி செல்வராஜ் சிஎஸ்ஐ பெண்கள் மேல்நிலைப்பள்ளியில் தனது ஜனநாயகக் கடமையை நிறைவேற்றினார்.



பல்லடம் சட்டமன்ற தொகுதி கழக வேட்பாளர், திருப்பூர் மத்திய மாவட்ட கழக செயலாளர் க.செல்வராஜ் கொங்குநகர் ஸ்ரீ வெங்கடாசலபதி மாநகராட்சி துவக்கப்பள்ளியில் தனது ஜனநாயகக் கடமையை நிறைவேற்றினார்.